892

உ

சிவமயம்.

நாலுநாலுபாதமாக பனிரெண்டு ராசியை பிரித்து

ஜெனித்தஸ்தானம் முதலிய

அடையாளங்களைக் குறிப்பிட்டுச்சொல்லும்

- காக்கையர் நூல் -

காக்கையர் வாக்கியம்.

இவை

திரிசிரபுரம் சின்னகடைத்தெரு ஜோசியம்

இரங்கசாமிபிள்ளையவர்களால்

பரிசோதிக்கப்பட்டு

திருச்சினுப்பள்ளி ஜில்லா உத்தமர் [illegible]

ஜோசியம் - நீலக[illegible]யரவர்கள்

கேட்டுக்கொண்டபடி

திரிசிரபுரம் புஸ்தகவியாபாரம்

தி. சபாபதிபிள்ளை மருமகன்

தா. பொன்னுசாமி பிள்ளை அவர்களால்

...ரேடிவ் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

1932 [அணா 4.

...RED COPY RIGHT.

OFFICE OF ... MADRAS 12 AUG 193…

உ

சிவமயம்.

நாலுநாலுபாதமாக பனிரெண்டு ரசியை பிரித்து

ஜெனித்தஸ்தானம் முதலிய

அடையாளங்களைக் குறிப்பிட்டுச்சொல்லும்

- காக்கயார் நூல் -

காக்கயர் வாக்கியம்.

இவை

திரிசிரபுரம் சின்னகடைத்தெருவு ஜோசியம்

இரங்கசாமிபிள்ளையவர்களால்

பரிசோதிக்கப்பட்டு

திருச்சினாப்பள்ளி ஜில்லா உத்தமனூர் புதுவூர்

ஜோசியம் - நீலகண்டய்யரவர்கள்

கேட்டுக்கொண்டபடி

OFFICE OF THE REGISTRAR OF ... 12 AUG 1933 MADRAS

திரிசிரபுரம் புஸ்தகவியாபாரம்

தி. சபாபதிபிள்ளை மருமகர்

தா. பொன்னுசாமி பிள்ளை அவர்களால்

திருச்சி கோவாபரேடிவ் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

1932

REGISTERED COPY RIGHT.

600 008.
173525

உ

அம்பாள் துணை.

காக்கையர் நூல்.

மேஷம் முதற்பாதம்.

மேடமுதலக்கினந்தா னுதையமாகில்
விளம்புகிறேன்வடக்கதுவே வீதியாகும்
ஆடழகுகுளங்கிணறு மருகேநிற்கும்
அந்தமனையிருந்து கட்டினதேயாகும்
நீடியதோராலயங்கள் தெற்கேயாகும்
நேர்வடக்குவாலயமு மிடிந்துகாட்டும்
பாடுமுள்ளவீதியிலோர் கணேசருண்டு
பாடினேனடியொன்று பரிந்துபாரே. 1

OFFICE OF THE REGISTRAR ...
12 AUG 1933
MADRAS

மேஷம் இரண்டாம்பாதம்.

மேடமென்றலக்கினந்தான் இரண்டாம்பாதம்
விளம்பியதோர் கீழ்மேற்கு வீதியாகும்
பாடுற்றகுளங்கிணறு மெதிராய்த்தோன்றும்
பரிவானவாலயமே வாய்வின்றிக்கில்
நீடியதோர்நேர்மேற்கீற் குண்டமொன்று
நிறைதெற்குவடக்குமொரு வாழியாகும்
ஆடையுடனடுத்தமனை பாழேயாகும்
அதற்கேற்றமண்ணுமனை யறிவித்தோமே. 2

மேஷம் மூன்றாம்பாதம்.

குறியிலிவன்ஜெனனமது மூன்றாம்பாதம்
கூறுவேன்வடக்குதெற்கு வீதியாகும்
சரியாயிருபுரமுந் தடுத்தவீடு
தானிருக்குந்தெருவாயிற் கிழக்கேசொல்லும்
பெரியகன்னிநகரமதி லீசன்கோஷ்டம்
பேசினேன்மேற்குதிக்கிற் கணேசன்கோயில்
அருகாகவம்மனையிற் சாத்தான்குறவன்
ஆறருகேதானுண்டா மறிந்துகொள்ளே. 3

மேஷம் நான்காம்பாதம்.

தகரதில்நாலாம்பாதந் தன்னிலேஜெனனமானால்
புகல்வதுகிழக்குமேற்கு புகன்றிடுந்தெற்குவாசல்
மகரசிங்கத்திற்குண்ட மங்கொருகோயில்தோப்பு
யிகர்துலைமேஷஞ்சாத்தா னிருக்குமேகுண்டமொன்றே.

ரிஷபம் முதற்பாதம்.

குண்டையிவன்பிறந்துவந்த வீதிதன்னைக்
கூறுகிறேன்றென்வடக்கு வீதியாகும்
அண்டமெனுமிவன்வாசற் கிழக்கேயாகும்
அதற்கருகில்மூன்றாம்வீ டதுவும்வின்னம்
பண்டையென்னுந்தென்கிழக்கிற் றடமேயாகும்
பகர்கன்னியுத்திரத்தி லீசனுழி
கெண்டையெனுங்கயல்விழியாய் ரிஷபந்தேளும்
கிரமத்திற்குடியிருப்பு கணேசன்துர்க்கை. 1

ரிஷபம் இரண்டாம்பாதம்.

விடையிலிவன்பிறந்துவந்த ரெண்டாம்பாதம்
விளம்புகிறேன்கீழ்மேற்கு வீதியாகும்
நடைபுலவுவாசலது தெற்கேயாகும்
நாட்டுகிறேன்கீழ்மேற்கு கணேசன்குண்டம்
படையிலிவன்மிதுன துலாங் கும்பந்தன்னிற்
பாடுகிறார்மையன்துர்க்கை மாரியென்று
குடையிலிவன்குடும்பத்தில் வாழுந்தெய்வம்
கொல்லையிலேகுடியிருப்பா மென்றுகூறே. 2

ரிஷபம் மூன்றாம்பாதம்.

புல்லிடப மிவன்ஜெனன மூன்றாம்பாதம்
புகலுகிறேன்றென்வடக்கு வீதியாகும்
கல்வியுட னவன்வாசல் மேற்கேயாகும்
காட்டுமேயத்தெருவிற் கணேசன்கோயில்
செல்லுமேமேடமது தனுசுதன்னில்
சிவன்சத்திகுண்டமென்று செப்பலாகும்
வல்லமையாமிவன்குடும்பத் தன்னில்வாழும்
மாமதுரைவீரனென்று வகுத்துச்சொல்லே. 3

ரிஷபம் நான்காம்பாதம்.

ரிஷபமேநான்காம்பாதம் நேருடன்கிழக்குவீதி
அழகியவடக்குவாசல் அதிலிருகும்பமுண்டு
பழகியகிழக்கில்குண்டம் பதிந்திடுங்கோயிலுண்டு
அழகியசாத்தான்கோயி லம்மையாம்வடபுரத்தில். 4

மிதுனம் முதற்பாதம்.

மிதுனமுதற்பாவமதி லுதையமாகில்
விளம்புகிறேன்தென்வடக்கு வீதியாகும்
இதரமெனுமிவன்வாசல் கிழக்கேயாகும்
யிவனில்லத்தண்டைசந்து பாழதாகும்
மிதுனமதில்மேற்கதிலே குண்டங்கோயில்
மேலீசன்சூழ்சத்தி கால்வாயொன்று
அதன்மேலுமிவன்குடியை யாளுந்தெய்வம்
அயலூராமென்றுசொல்லி யறிவித்தோமே.

மிதுனம் இரண்டாம்பாதம்.

தண்டிவிவன்ஜெனனமது விரண்டாம்பாதம்
தானதுவேகீழ்மேற்கு வீதியாகும்
அண்டியிவன்வாசலது தெற்கேசந்து
அதன்மேலேசூட்சியொன்று கோயிலுண்டு
கண்டுமிவன்வடதிக்கின் றென்பால்கீழ்பால்
காவியொன்றுகால்வாய்நீ ரோடையொன்று
கொண்டோடியிவன்றனையே காக்குந்தெய்வம்
கூறுமக்கினிவாயுவே குறித்துச்சொல்லே.

2

மிதுனம் மூன்றும்பாதம்.

ஆழியிவன்ஜெனனமது மூன்றும்பாதம்
அதுதெற்குவடக்குள்ள வீதியாகும்
தாழியிவன்றலைவாசல் மேற்கேயாகும்
சாற்றினேமக்கினியில் சாத்தான்மாரி

ஆழியிவன்றேள்ரிஷப ராசிதன்னி
லாற்றுகெங்கைசடையணிந்த வீசனில்லம்
வாழியிவன்றென்புரத்திற் றேருங்கோயில்
வகுத்துரைத்தபுஜண்டருட வாக்குத்தானே. 3

மிதுனம் நான்காம்பாதம்.

OFFICE OF ... 12 AUG 19.. MADRA..

கல்விணைராசிதன்னில் நான்காம்பாதம்
நாடிவந்தசுதன்வீதி கிழக்குமேற்கு
பல்வினையாலிவன்வாசல் வடக்காமில்லம்
பாருமதுசொந்தமில்லை பிறர்தன்வீடு
சொல்வினையாருசிகும்பம் துலையிற்குண்டம்
சொல்லுமதிற்சிவன்சத்தி சாத்தான்கோஷ்டம்
வெல்வினையாமிவன்குடும்பந் தன்னைக்காக்கும்
வேல்மதுரைசொக்கலிங்க வீரன்றனே. 4

கடகம் முதற்பாதம்.

கொண்டலெனுங்கடகமதி லுதையமாகிற்
கூறுவேனவன்வீதி வடக்குதெற்கு
விண்டவன்றன்வாசலது மேற்கேயாகும்
மிவனில்லந்தன்னருகிற் குண்டமுண்டு
பண்டலெனுந்துலாங்கும்ப மேடந்தன்னிற்
பண்பானகோயில்சத்தி சாத்தான்மாரி
விண்டலெனுமிவன்தெருவில் விளங்குந்தெய்வம்
வேல்முருகக்கடவுளென விளம்பலாமே. 1

கடகம் இரண்டாம்பாதம்.

நண்டிலுறுஜெனனமது விரண்டாம்பாதம்
நாடிவந்தசுதன்வீதி கிழக்குமேற்கு
அண்டியிவன்வாசலது தெற்கேயாகும்
மனையெதிரிற்சந்துயெதிர் வீடுமில்லை
கொண்டலிவன்குடியிருப்பு ரெண்டாம்பாதம்
கூரக்கினிமேடந்துலாங் கும்பங்குண்டம்
வண்டிலிவன்வாழுமிந்த வீதிதன்னில்
வருஞ்சுழி மதன்கோஷ்டங் கடகந்தானே. 2

கடகம் மூன்றும்பாதம்.

சேர்க்கையெனுமிவன்ஜெனன மூன்றும்பாதம்
ஜெனித்துவந்தசுதன்வீதி வடக்கேயாகும்
வேர்க்கையிவன்றலைவாசல் கிழக்கேயாகும்
மேஷதுலாமிதுனத்திற் குண்டங்கோயில்
ஆக்கையெனுந்தேள்மகர மைய்யனம்மை
யானகடைவீதியொன்று கால்வாயொன்று
சேர்க்கையெனுமாதேகேள் புஜண்டர்வாக்கை
செப்பினதோர்நூல்தனிலே தப்பிராதே. 3

கடகம் நான்காம்பாதம்

நன்னியென்னும்நண்டதனி னான்காம்பாதம்
நாடிவந்தசுதன்வீதி கிழக்குமேற்கு
சென்னியெனுமிவன்வாசல் வடக்கேயாகும்
திகழ்கன்னிசத்திரமு மீசன்கோவில்

கன்னியெனுந்தேள்மிதுனம் காரிகோஷ்டம்
காரகத்திலரசுகுண்டங் காளிகோயில்
வன்னியிவன்குடியதனில் வாழுந்தெய்வம்
மதுரைவீரன்சத்தியொன்று வகுத்துச்சொல்லே. 4

சிங்கம் முதற்பாதம்.

சிங்கமெனுமிலக்கினந்தா னுதையமாகில்
சிறப்பானகீழ்மேற்கு வீதியாகும்
பங்கமெனும்பிதிர்குடும்ப மூன்றேயாகும்
பாலனிடவாசலது தெற்கேயாகும்
இங்கேயெனுமிருபுரமுஞ் சந்தேயாகும்
இயல்பானமேற்புரத்திற் கோயிலாகும்
தங்கவேவெகுகாலத் தியோகவானுஞ்
சாற்றுகிறேன்கீழ்திசையிற் றடாகமுண்டே. 1

சிங்கம் இரண்டாம்பாதம்.

சிங்கமெனுமிலக்கினந்தா னிரண்டாம்பாதஞ்
சிறப்பானதென்வடக்கு வீதியாகும்
அங்கமிலாதிதிற்பிறந்த மனையிற்றோட்டம்
அம்மனையின்முன்புரமே கட்டிநிற்கும்
சங்கையறரிஷபகன்னி மகரராசி
சாரிற் சிவலிங்கமொன்று வாழியொன்று
திங்களணிகடகமது லக்கினதி
சேர்ந்திருக்கின்விழல்வீடு தானுண்டாமே. 2

சிங்கம் மூன்றாம்பாதம்.

தானமாம்புவியிலிவன் மூன்றும்பாதம்
தான்வந்தசுதன்வீதி கிழக்குமேற்கு
ஆனயிவன்றலைவாசல் வடக்கேயாகும்
அந்தயில்லந்தன்னருகிற் பாழதாகும்
மானமகாமேடதனு மீனஞ்சாத்தான்
மகாளிகுலமதனை கார்க்குந்தெய்வம்
கானசத்திபாவாடை ராயனங்கே
கார்த்திருப்பானெக்காலுங் காவலாமே. 3

சிங்கம் நான்காம்பாதம்.

அரியதனிலிவன்ஜெனனம் நான்காம்பாதம்
ஆகிவந்தசுதன்வீதி வடக்குத்தெற்காம்
தலையிலிவன்வாசலது மேற்கேயாகும்
சாற்றுகிறேமிவன்வீட்டி லிருபாலில்லம்
எரிமேடந்துலாமகர ராசிதன்னில்
இருக்குமதுசூழிகுண்டங் கோயிலொன்று
சரியில்லைகார்க்கவந்த பெரியதெய்வம்
தானடிமையிவனெனவே சாற்றலாமே. 4

கன்னி முதற்பாதம்.

கன்னியெனுமிலக்கினந்தா னுதையமாகில்
கனமாககீழ்மேற்கு வீதியாகும்
உன்னதமாய்தென்வாசல் மேற்கேகோஷ்டி
யுயருகின்றவாலயமு மெதிரேதோன்றும்

மன்னியவர்கீழ்புரத்தில் நீராடும்வாய்க்கால்
வாழையுடன்தேங்கமுகு தோன்றும்பாரு
மன்னவனார்புஜண்டரவர் சொன்னதாலே
வளமறிந்துதிடமுடனே வரையலாமே. 1

கன்னி இரண்டாம்பாதம்.

தெரிவையெனுமிலக்கிணந்தா னிரண்டாம்பாதம்
ஜெனித்துவந்தசுதன்வீதி வடக்குதெற்கு
அரிவையெனுமிவன்வாசல் கிழக்கேயாகும்
அவ்வில்லத்தருகிற்குண்டம் மெதிரேகாவி
தரிவையெனுந்தனுர்மீனம் வடக்கேசாத்தான்
சாதுகன்னியீசனில்லங் கிழக்கேகுண்டம்
கருவிலிவன்குலங்கார்க்குங் கருப்பன்மாரி
கதித்தபஞ்சபாண்டவர்க்கே சகாயனென்னே. 2

கன்னி மூன்றாம்பாதம்.

சேடிதனிற்ஜெனனமது மூன்றாம்பாதம்
ஜெனித்துவந்தசுதன்வீதி கிழக்குமேற்கு
பாடியிவனில்லமதுக் கருகிற்சந்து
பக்குவேன்றலைவாசல் வடக்கேயாகும்
ஆடியதோரம்பலவன் கேணேசன்கோயில்
அதுமகரமேடசிங்க மறிந்துகொள்ளு
கூடியிவன்குடும்பத்தைக் காக்குந்தெய்வங்
குணவீரனென்றுமிவை கூறலாமே. 3

கன்னி நான்காம்பாதம்.

கையதனிற்கனலேந்துங் கன்னியென்றும்
காணயிந்தசுதன்வந்த நான்காம்பாதம்
வையமிவன்வீதியது வடக்குத்தெற்கு
வளமானதலைவாசல் மேற்கேயாகும்
செய்யயிவன்மனைக்கருகிற் சந்துமுண்டு
செப்புகிறேன்கீழ்மேற்கு குண்டங்கோஷ்டம்
மெய்யிலிவன்குலங்கார்க்குந் தெய்வமெல்லா
மேல்வடக்குத்தெற்கிலொரு கோயிலுண்டே. 4

துலாம் முதற்பாதம்.

சீரானதுலாமதிலே தோன்றுமாகில்
சிறப்பானகீழ்மேற்கு வீதியாகும்
பேரானவடவாசல் மேற்கேகோயில்
பெரிதானகொல்லையிலே புளியனூர்த்தை
கூரானகுலமெட்டில் குடும்பந்தன்னில்
குண்டமாங்கோயிலொன்று குறித்துச்சொல்லு
ஆரானயிவன்குலத்தை யாளுந்தெய்வம்
ஆடுபன்றிகோழிகொல்லும் மாண்டவன்றான். 1

துலாம் இரண்டாம்பாதம்.

கோலமிதிலிவன்ஜெனன மிரண்டாம்பாதம்
குறித்துவந்தசுதன்வீதி வடக்குத்தெற்கு
ஏலவிவன் றலைவாசற் கிழக்கேயாகும்
இருபுறமுமில்லமது கிழக்கேயுண்டாம்

சாலதனுர்கடககுண்டஞ் சாத்தான்மாரி
சாற்றுவேன்தெருவீதி மதவேள்கோட்டம்
வேலவனூர்குலமதனில் விளங்குந்தெய்வம்
வெரித்த கள்ளுசாராயம் விரும்புவோனே. 2

துலாம் மூன்றாம்பாதம்.

செட்டியெனுமிவன்ஜெனன மூன்றும்பாதம்
ஜெனித்துவந்தவிவன்வீதி கிழக்குமேற்கு
திட்டியெனுமிவன்வாசல் தெற்கேயாகும்
தேள்மீனமேஷமதிற் சனங்கள்கோஷ்டம்
வட்டியெனும்வாசலிலே மரங்களுண்டு
வளர்மேஷம்துலேமகரம் குண்டஞ்சூழி
கட்டியிவன்குலமதனைக் காக்குந்தெய்வம்
காளிசத்திபாவாடை ராயன்றானே. 3

துலாம் நான்காம்பாதம்.

வணிகனெனுமிராசிதனி னான்காம்பாதம்
வந்துதித்தான்வீதியது வடக்கேயாகும்
அணிகனெனுமேல்வாசற் றெற்கேதோப்பு
அந்தயில்லத்தருகினிற்சங் தடுத்துப்பாரு
குணிகடகந்தனுர்மேடம் கோயிற்குண்டம்
கூறுமிவன்றெருவீதி குடியாங்காளி
கணிகனெனுமிவன்குலத்தைக் காக்குந்தெய்வம்
காத்தவனூர்மாரியென்றுங் கருதிச்சொல்லே. 4

விருச்சிகம் முதற்பாதம்.

அரிவதென்ன விருச்சிகந்தா னுதையமாகில்
அப்பனேகீழ்மேற்கு வீதியாகும்
தெரிவதென்னதென்வாசல் மேற்கேகோயில்
செப்புகிறேன்மேற்புரத்திற் றடாகமொன்று
திரிவதென்னகீழ்ப்புர நீரோடும்வாய்க்கால்
ஸ்திரமாகமரமுண்டு வறிந்துகொள்ளு
பிரிவானவடபுறத்திற் பிடாரிகோயில்
பேரானபாட்டையொன்று தோன்றும்பாரே. 1

விருச்சிகம் இரண்டாம்பாதம்.

பத்துடையதேளில்வந்த னிரண்டாம்பாதம்
பாருமிவன்றெருவீதி வடக்குத்தெற்கு
கொத்துடனேயிவன்வாசற் குறியேமேற்கு
கொல்லையினிற்குலதெய்வங் குடியிருப்பாம்
கத்துடையகூக விருச்சிகமீனத்தில்
காவிகுண்டங்கால்வாய் நீரோடுங்கோயில்
சத்துடையவிவன்வீட்டிற் றிருபாலில்லம்
சாற்றுகிறேமேஷங்கன்னி சாத்தான்மாரி. 2

விருச்சிகம் மூன்றும்பாதம்.

தேளதனிற்றெருக்காலிற் மூன்றும்பாதம்
செனித்துவந்தசுதன்வீதி கிழக்குமேற்கு
ஆளனில்லமிவன்வாசல் வடக்கேயாகும்
அதுசந்துக்கடுத்தவீ டதுவுமாகும்

மீளனெனுமேடசிங்கங் கால்வாய்த்தோட்டம்
மிகமகரங்கன்னிகுண்டங் கோயிலாகும்
கோளனெனுங்குலதெய்வங் குடியன்வீரன்
கொல்லையிலேகுடியிருப்பா மென்றுகூரே. 3

விருச்சிகம் நான்காம்பாதம்.

விட்டதொருதேளதனி னான்காம்பாதம்
விளம்பிவந்தசுதன்வீதி வடக்குதெற்கு
கிட்டியிவன்றலைவாசற் கிழக்கேயாகும்
கேளிருவர்பாகமுமாம் குடியிருப்பு
தொட்டதனுர்மேடகுண்டஞ் சத்தியோகம்
சொல்லுமதிலீசன்பதி யீசானியத்தில்
கட்டியிவன்குடியைநிதங் கார்க்குந்தெய்வம்
அருப்புகச்சைகட்டுகிற வீரன்றானே. 4

தனுசு முதற்பாதம்.

தனுசுலக்கினமேயாகிற் றகமையாங்கிழக்குமேற்கு
மனையுடன்மற்றவாசல் மருவியேகட்டிரண்டாம்
அனுதினம்பூசைசெய்யு மரன்கோயில்மேற்கேயுண்டு
கனமதாய்தெற்கில்தோப்பு காலிசூழ்பாருண்டாமே.

தனுசு இரண்டாம்பாதம்.

வின்னதனில்ஜெனனமது ரெண்டாம்பாதம்
விளங்கிவந்தசுதன்வீதி வடக்குத்தெற்கு
சொன்னதொருமேல்வாசல் மிதுனகுண்டம்
சூழுமதின்காவியொன்று கால்வாயொன்று

அன்னமொருமேடதுலை யயினார்கோவில்
ஆனமொருவீதிதனில் மதவேள்சாதி
இன்னவன்றன்குலமதனைக் காக்குந்தெய்வம்
இருவகுப்பாமென்றெடுத்து வியல்பாய்ச்சொல்லே.

தனுசு மூன்றாம்பாதம்.

காண்டிபம்வந்திவன்ஜெனன மூன்றாம்பாதம்
காணவந்தசுதன்வீதி கிழக்குமேற்கு
ஆண்டயிவன்றலைவாசல் வடக்கேயாகும்
அதனருகில்ஐயனார் சத்தியாகும்
பூண்டதுவுமேஷமதிற் குண்டங்கோஷ்டம்
புகழானசிலநாளிற் றருக்களுண்டு
ஆண்டயிவன்குலதெய்வ மையன்காளி
ஆகமிவனுமெனவே யறியலாமே.

தனுசு நான்காம்பாதம்.

கார்முகத்திலிவன்ஜெனனம் நான்காம்பாதம்
காணவந்தசுதன்வீதி வடக்குதெற்கு
ஏர்முகத்திலிவன்வாசற் கிழக்கேயாகும்
எதிர்வீடுபாழெனவே யிருக்குஞ்சூழி
பேர்முகத்தில்மேஷகன்னி துலையிற்குண்டம்
பேசலாமரங்கோஷ்ட மீனங்கால்வாய்
கோர்முகத்திலிவனடியைக்காக்குந்தெய்வங்
கெஜவீரனுமவனைத் தெரிந்துகொள்ளே.

மகரம் முதற்பாதம்.

மகரலக்கினமேயாகின் மருவியகிழக்குமேற்கு
அகமதுதெற்குவாச லதற்கெதிர்சந்துமுண்டாம்
ஜெகம்புகழ்கோயில்மேற்கு செப்புநீர்குளமுமுண்டு
வகையுடன்மரங்கள்சூழ்ந்த வரிசைகள்தானுண்டாமே.

மகரம் இரண்டாம்பாதம்.

கேதுவெனும்லக்கினந்தா னிரண்டாம்பாதம்
கேடறுமைந்தன்வீதி வடக்குத்தெற்கு
வாதுருந்தலைவாசற் கிழக்கேயாகும்
வந்தயில்லம்மூன்றிலோர் பங்குமாகும்
பாதுதலைமேஷதண்டு மகரமீனம்
பாரிதிலேகோயிலொன்று பகரலாகும்
வேதியன்றன்குலங்கார்க்குந் தெய்வமாங்கே
வேள்மதுரைவீரனென்றே விளம்பலாமே. 2

மகரம் மூன்றும்பாதம்.

மான்கலையிலிவன்ஜெனன மூன்றும்பாதம்
வந்துதித்தோன்வீதியது கிழக்குமேற்கு
வான்கலையிலிவன்வாசல் வடக்கேயாகும்
மானகுண்டமேஷதுலை மகரமாகும்
ஒன்கலையில் ரிஷபகன்னி மகரந்தன்னி
லோதுகங்கைசடையணிந்தோ நீசனையன்
என்கலையாக்குலங்கார்க்குந் தெய்வங்கேளா
யென்னபெரியாண்டவன்றன் பத்தியாமே. 3

மகரம் நான்காம்பாதம்.

புல்வாயில்யிவன்ஜெனனம் நாலாம்பாதம்
பொருந்திவந்தசுதன்வீதி வடக்குத்தெற்கு

செலவாயின்றலைவாசல் மேற்கேயாகும்
மேஷமாந்துலைமகரங் குண்டங்கோயில்
பல்வாயிலிம்மனையோ விரண்டுபாகம்
பாரதற்குமெதிரில்லம் பாழதாகும்
சொல்லயிவன்குலதெய்வ மையன்சத்தி
சூழ்பெரியாண்டவன்றன் பத்தியாமே.

கும்பம் முதற்பாதம்.

கும்பலக்கினமேயாகிற் குலவியவடக்குத்தெற்கு
சம்பிரமாம்கிழக்குவாசற் றடாகமுங்கீழ்மேலுண்டு
கும்பலாயரசுமேற்கு கூறியகிணறுமுண்டு
இன்பமாய்விஷ்ணுகோயி லிருந்திடுந்தப்பிராதே.

கும்பம் இண்டாம்பாதம்.

கொட்டுகும்பலக்கினந்தா னிரண்டாம்பாதம்
கூறிவந்தசுதன்வீதி கிழக்குமேற்கு
தெட்டவிவன்றலைவாசல் மேற்கேயாகும்
தேள்கடகமகரகன்னி குண்டங்கோயில்
வட்டவிவனீசன்றிக்கில் வடபால்மேலே
மனையிடிந்துகலைந்துநிற்குங் கண்டுகொள்வாய்
தொட்டனிவனதற்கப்பால் மனையும்பாழாம்
சொல்லுமிவன்குலதெய்வந் துர்க்கைவீரன்.

கும்பம் மூன்றும்பாதம்.

செட்டுதனில்ஜெனனமது மூன்றும்பாதம்
ஜெனித்துவந்தசுதன்வீதி வடக்குத்தெற்கு
வெட்டிதனிற்றலைவாசல் மேற்கேயாகும்
மேஷதுலைதேள்தனக்குக் குண்டங்கோயில்

பொட்டிலிவன் பிறந்தமனை சொந்தமல்ல
பேசுமனையயலார்தன் குடியிருப்பு
குட்டிலிவன்குடிவிளங்குந் தெய்வங்கேளு
கொடியபெரியாண்டவனுங் கூறுவாயே. 3

கும்பம் நான்காம்பாதம்

குடமதனிலிவன்ஜெனனம் நாலாம்பாதம்
கூடிவந்தசுதன்வீதி கிழக்குமேற்கு
வடமதனிற்றலைவாசல் வடக்கேயாகும்
ஆனதொருகொல்லையிலே சூழிபத்தும்
இடமதனிற்துலைமகர மிரண்டுசூழி
யெதிர்த்தொருதேள்மிதுன மீசன்கோயில்
வடமதனில்வாழுயிவன் குலதெய்வந்தான்
வாழ்சத்திவீரன்முனி யென்றுசொல்லே. 4

மீனம் முதற்பாதம்.

மீனத்திற்றோன்றியவன் முதலாம்பாதம்
விளங்கவந்தசுதன்வீதி கிழக்குமேற்கு
தானமதிலமர்ந்திருக்கும் வடக்குவாசல்
தன்னிலோர்குண்டமொன்று சார்ந்திருக்கும்
ஆனதொருகன்னிகுண்டங் கோயிலொன்று
அக்கினியில்வடக்குண்டு சாத்தான்மாரி
கானயிவன்கருக்குலத்தைக் காக்குந்தெய்வம்
கண்டுசொல்லுபொம்மியம்மன் வாழதாமே. 1

மீனம் இரண்டாம்பாதம்.

சேலுடையமீனத்தி னிரண்டாம்பாதம்
ஜெனித்துவந்தவீதியது வடக்குத்தெற்கு

யேனுடையயிவன்வாசற் கிழக்கேயாகும்
யென்றதுலைமகரகன்னி குண்டங்கோயில்
மேலுமிவன்பிறந்தமனை சொந்தமல்ல
மேற்றிக்குவடுத்தமனை காலிசூழி
காறுமிவன்கருப்பத்திற் காத்தான்தெய்வம்
கண்டுசொல்லுங் காக்கயர் தன்வாக்குதானே. 2

மீனம் மூன்றாம்பாதம்.

செங்கையெனுங்கெண்டையதின் மூன்றும்பாதம்
தேறுமந்தசுதன்வீதி கிழக்குமேற்கு
அங்கையிவன்றலைவாசற் றெற்கேயாகும்
ஆனதுலைமகரசன்னி கோயிற்குண்டம்
மங்கைதருமேடசிங்க மங்கேகோஷ்டம்
வாசமில்லங்குடியிருப்பு சந்துவங்கே
இங்கேயிவன்குலதெய்வ மென்னவென்றால்
ஏதுபெரியாண்டவனென் றயம்பலாமே. 3

மீனம் நான்காம்பாதம்.

மீனமெனுமிலக்கினந்தா னுன்காம்பாதம்
மீண்டுவந்தசுதன்வீதி வடக்குத்தெற்கு
ஆனயிவன்றலைவாச லதுவுமேற்கு
அந்தயில்லந்தனக்குக்கீழ் மேற்கிற்குண்டம்
வானகன்னியிடமேற்கிற் கோயிலொன்று
வரும்வழியில்வாவியொன்று மருத்துச்சொல்லு
தீனமிவன்றெய்வமது தெற்கேயுண்டு
செல்லக்காளென்றுமதை தெளிந்துசொல்லே. 4

காக்கயர்நூல்—48 முற்றிற்று.

உ

கடவுள் துணை.

காக்கையர் வாக்கியம்.

கரியவன்ஐந்தில் கனகனும்சேயும்
காணவே மூன்றினிலமர
பரிதியும்புதனும் பதிந்திடவாக்கில்
பண்சசியறவுமே வியமாய்
வரிபுகர்மாந்தி யுயிர்தனில் அமர
வழங்கியகேதவராறில்
குரியெனவுயிரும் கயலெனப் பகர்வோம்
குறித்திடும் அம்சமும் தனுசே. 1

தனுசெனமாந்தி யரவுமே வியத்தில்
தண்சனிலாபத்தி லமர
அனுமறை தெசத்தில் ரவிபுகர்நவமாய்
அன்புடன் புதன்சசிமூன்றில்
கனுவெனசேயும் ஐந்தினிலாகூடி
கதித்திடும் சிகியவனுளாய்
பனுவெனப்பிறந்த ஜாதகர்தனக்கு
பற்றியபலனது பகரே. 2

பகரெணநிறமும் கருப்பினில் சமனும்
பற்றியபகரமே யுள்ளான்
நிகரெனசுகஸ்தன் நின்மனக்கவடி
நிலமதில் யோகவானாகும்
அகரெனப்புவியில்,வாணிபசுகஸ்தன்
வழங்கிய யூகவானிவனும்
துகரெனத்துன்ப வினைகளுமில்லான்
துற்பலங்கொடுத்திடாச் செயலோன்
வகரெனவம்பு வழக்குகளுரைப்போன்
வார்த்தையால் இஷ்டத்தில்சுகனே. 3

சுகனெனப்பிறந்த ஜாதகர்தனக்கு
சுகமதாய் துணைகளுமில்லான்
இகமதில்கன்னி துணையதுயேகம்
இருப்பெனப்பகர்ந்தது இவர்க்கு
அகமதில்சுகங்கள் மிகுதிறமுள்ளான்
அன்புடன்பிதாபொருள் குறைவோன்
ஜெகமதில்துணைபோல் இருந்தவள்நிதியும்
செப்பிய இவர்க்கதுபெலமே. 4

பெலமதால்யோகம் தீர்க்கமென்றுரைத்தோம்
பிற்பலச்செயல்களு முடையான்
குலமதால்சுகமும் ராகுவின்திசையில்
குறித்தனர் பலபிணியிவர்க்கு
அலமெனச்சுகமாம் மறையவன்திசையில்
அன்புடன் தனதுநாளதனில்
சலமெனத்தருகாக்குறைவென உரைத்தோம்
சாத்தியசனி புதனுனே. 5

ஊனெனஅதனில்பலன் சமனுரைத்தோம்
உகந்திடும் தனவழிக்குறைவும்
கானெனமனமும் ஏற்கையையணுகா
காட்டிய சிகிபுகரவியூண்
ஆனெனஇவர்க்கு தந்தையர்மரணம்
அன்புடன்மனமதில்க் குறைவும்
வாணெனப்பொருளும் மற்றவராலே
வந்துமே யணுகிடுமிவர்க்கே. 6

இவர்க்கென அதுவால்சுகங்களும்மேலாம்
இன்பமா யோகமுமமையும்
பவர்க்கென்பாக்கிய வழிதனில்சுகமும்
பற்றிய வாணிபயோகம்
நவர்க்கெனமேன்மை வீரவரத்திறமாம்
நம்பிய செயல்களுங்காட்டும்
அவர்க்கெனசுகங்கள் சேயரவூணில்
அன்புடன் பலமதுவுரையே. 7

உரைஎனஇவர்க்கு யோகமும்சுகமாம்
உரைத்திடும் வரவதால்மேன்மை
கரைஎனத்தருகா சனிதிசையதனில்
காட்டியசுகமுடன் .ஏற்கை
திரைஎனச்செல்வம் உண்டெனக்காண
தீர்க்கமாய் புதன்சிகிபுகரூண்
வரைஎனமேன்மை விவாகமுமிவர்க்கு
வழங்கிய இஷ்டங்கள்சுகமே. 8

சுகமதில்மேன்மை வரவினல்சிலவும்
சொல்லிய இயற்கையும்மேலாம்
அகமதில்சுகமும் அணிகிடுமிவர்க்கு
அன்புடன்ரவி சசிசேயூண்
வகரெனஅன்னை மரணமுங்காட்டும்
வழங்கிய அலைச்சலுமிவர்க்கு
லகமெனவம்பு பலமதுஅணுகா
வந்திடும் லாபத்தில் சமனே. 9

சமனெனில்சுகமாம் மறுமணமுரைத்தோம்
சாற்றிய அரவினுண்வரையாம்
பமனெனஇவனும் ஜென்மமுன்னதனில்
பாக்கிய பலனிலாதவனும்
அமனெனசிவனின் அருளினலிவர்க்கு
அன்புடன்ஜெனனமும் இதுவாய்
கமனெனப்பொருளும் கன்னியால்கிடைத்து
காட்டிய இருமணமுறையே. 10

உரையெனஅதுவும் திரமெனப்பகர்ந்தோம்
உதகிடும் வாணிவாணிபமும்
நிரையெனப்புதல்வர் மூன்றுடன்கன்னி
நிற்குமென்றுரைத்தனர் இவர்க்கு
தரைதனில்பலன்கள் மேன்மையையடைவன்
தண்மையாய் மறையவனுனில்
குரையெனத்தருகா புதன்திசையதனில்
குறித்திடும் தனதுநாள்பகரே. 11

பகரெனஅதனில் பீடையும் விலகும்
பற்றிய சிகிபுகரவியூண்
துகரெனத்துன்ப வினைகளுமணுகா
தூரினேம் வாணிபலாபம்
தகரெனபாக்கிய வழிச்சிலவுண்டாம்
தங்கிய ரவிசசியரவூண்
அகரெனமேன்மை அணுகிடுமிவர்க்கு
அதில்மறையூணினில் அழிவே. 12

கரியவன்சசியும் அரவுரநண்டில்
கனகனும் சேயுரயெட்டாய்
பரியவன்ஆரில் பண்டிதன்புகரும்
பதிந்திட கோலினில்பிலமாய்
குரிசிகிதெசத்தில் மாந்தியும்கயலில்
கூருயிர்மரியென அமைத்தோம்
வரியெனஅம்சம் ரெட்டையாம் அரவும்
வாழ்ந்திட அரியெனபகரே. 13

பகர்சசிஐந்தில் குருவுமேதேளாய்
பானுவும் வியத்தினில்அமர
நிகர்சனிமாநதி கயலினில்யென்றேம்
நின்சிகி சேயவன்குடத்தில்
துகர்புதன்யெட்டில் சுக்கிரன்தனுவாய்
துலங்கிய சாதகன் தனக்கு
சுகர்நிர்மசமன்போல் ஆகுமென்றுரைத்தோம்
அமைந்திடும் விவேகமுள்ளவனே. 14

உள்ளவன்சிலாக்கியன் மிகுமனதயிரியன்
உகந்திடும் செல்வநாமென்றேம்
வள்ளலேசிலாக்கியன் வரவரயோகன்
வார்த்தையில் வித்தாரனுமிவனும்
தெள்ளனஅரசர் செயவுளகிரகாண்
செகத்தினில் கீர்த்திவானவன்
கள்ளனமனத்தன் வாகனயோகன்
கருவத்தில் சிரந்திடும்சுகனே. 15

சுகமெனகல்வி மூன்றெனஉரைத்தோம்
　　சூட்டிய அரசர் தன்லிபியும்
மிகமதில்அதுவும் மிகுதிரமாகும்
　　யியற்கையாய் துணைகளும்பகர்வோம்
தகமெனத்துணையும் ரெண்டுமேதீர்க்கம்
　　தங்கிடும் கன்னிரெண்டுடனே
வகமெனமறுதாய் வழிதனில்துணையும்
　　வழங்கிடு மிவற்குமே உரையே. 16

உரையெனயிவனும் சனிதிசையதனில்
　　இன்பமாய் அரவுனூணுதிப்யன்
நிரையெனபீடை காட்டியேவிலகும்
　　நின்றிடும் மரையினூணதனில்
துரையெனத்தும்பம் வந்துமேவிலகும்
　　துலக்கிய புதன்திசைதனதில்
கரையெனகுடும்ப பலன்மிக அனுகா
　　காட்டிய சிகிபுகறூணில். 17

ஊணினில்சிலாக்கியம் உயர்வுமேகாட்டும்
　　உகந்திடாபிணிவர விலகும்
காணனகாரிய குடும்பத்தில்வரவாம்
　　காட்டிய கல்வியும்யேற்கும்
பூணனபிரபல வாணிபமுயற்சி
　　புகந்திடும் யிட்டங்கள் முதலாய்
வேணனயோகம் றவிசசிசேயூண்
　　வேண்டிய மணமதுபிலமே. 18

மணமதுபிலமாம் களத்திரத்தால்யோகம்
　　மார்க்கமாய் பிதாபிணி உரைத்தோம்
குணமுளசேற்கை பணிமரையூணில்
　　கூரிநோம் அரசரின்முயற்சி
சணமதில்தாயும் மரணமும் அடைவள்
　　சஞ்சலம் காட்டுமாமிவற்கு
ரெணமது தருகா மேலதாய்யோகம்
　　வுரைத்திடும் விவாகமொன்றுரையே. 19

1735
A-864 NB

உரையெனமேன்மை சனியினுணதனில்
உகந்திடும் கேதுவின்திசையில்
நிரையெனசெல்வம் மேலதாயுயரும்
நின்றிடும்சென்ம முன்னிவனும்
நிரையெனசேற நாட்டினில்மறையோன்
நின்றிடும் குலமதில்செனித்து
வரையெனசெய்த கொடுமையினதுவால்
வழங்கினன் யிழிகுலத்துதித்தே. 20

உதித்துமேசெய்த நன்மையின்பயனால்
உகந்திடும் சோளநாட்டதனில்
சதித்துமேகலையின் வாணிபமுடைய
காட்டியபிதாவிடம் செனித்து
துதித்துமேயோகம் மிகுதியாய்அடைவன்
துலங்கியகுடும்ப தோஷத்தால்
விதித்துமேதந்தை தனக்கிருதாரம்
விளங்கிடும் தனக்கும்மவ்வழியே. 21

வழியெனரெண்டு தாரங்கள்தனக்கு
வளங்கிடும்புத்திரர் நான்காம்
களிபெறகன்னி ரெண்டிருதீர்க்கம்
காட்டினர்சென்மத்தின்வினையாம்
வழியுடன்புகேழுன் திசைதனதுாணில்
வழங்கிடும்பிதாவுமே அழிவன்
அழிவிலாயோகம் அரசர்சந்தோஷம்
அவனியில்மேலதாய்ப் பகரே. 22

பகரெனபாக்கியம் நிலம்பொருள்சேரும்
பற்றியசெய்சசி அரவூண்

நிகரெனசிம்மா சனமுதலுரைத்தோம்
நின்மறுதாயுமே அழிவள்
துகரிலாசெல்வம் அடைவநாமிவனும்
தூரிநோம் மரைசனியூனில்
அகரனபுவியில் தாரமொன்றொழியும்
அமைந்திடும் புதன்சுகியூணே. 23

ஊணினில் அரசர் யிட்டங்கள்யேற்கும்
அவ்னியில்மெல்வற் பகையும்
காணணபொருளும் செலவுமேஉரைத்தோம்
காட்டியரவிதிசை யதனில்
யூணணபிரபலம் மேலதாஅணுகும்
புகட்டியபணிமரை சனியூன்
ஆணணபுகரேன் ஊண்வறஆவி
அந்தகன் பதிக்கெனப்பகரே. 24

கரியவன்மாந்தி வாக்கினிலமர
கனகெனும் எட்டினில்மரைவாய்
பரிபுதன்மரியில் பார்க்கரவன்கயலாய்
பாழ்சிகி ஐந்தினில்பிலமாய்
குரிசசிவியத்தில் சேய்பணி எருசாய்
கூர்உயர்கடகமாய் அமைத்தோம்
வரி என அமுசம் கோலென அதனோன்
வந்திட சாடியென்றுரையே. 25

உரையெனசனியும் கன்னியிலமர
உகந்திடும் சேய்புதன் அரியில்
நிரை என எல்வி மூன்றினிலமர
நீன்சசி ஆரினில் மரைவாய்
கரை எனப்பணியும் கனகெனும் எட்டில்
கரிமகன் சிகியுரவாக்கில்
துரை எனக்கோட்கள் அமைந்தஜாதகனுக்கு
துலங்கிய நிரம்சுகமிவர்க்கே. 26

இவர்க்கென ஏர்க்கை மிகுந்தயோக்கியனும்
இன்பமும்குணமிக அமைந்தோன்
நவர்க்கென தயிர ஸ்ரீவழிகவனன்
நம்பலாம் யோக்கியனென்றிவனே
துவர்க்கென தும்ப வினைகளுமில்லான்
துர்மனகவடுகள் தருகா
அவர்க்கெனமேன்மை யரியநல்லுறவால்
அரசனின் இஷ்டனென்றுரையே. 27

உரை எனத்தந்தை பொருளது உள்ளான்
உகர்ந்திடும் துணைகளும் இவர்க்கு
நிரைஎனரெண்டு தீர்க்கமென்றுரைத்தோம்
நிலைத்திடும்கண்ணியும் அதுவாம்
வரையெனமற்றோர் தாய்தனிற்துணையும்
வழங்கிடுமிகுன்றன மிவர்க்கு
அரைஎனபுவியில் பிரபுவென் றுரைத்தோம்
அன்புடன் திசைபலபகரே 28

பகரென அரவோன் திசைபுக ஊனில்
பாரினில்ஜெனிப்பனும் இவனும்
துகரெனசுகங்கள் சமனதாய்காட்டும்
துலங்கிடும் ரவிசகிசேயூன்
நிகரெனகுடும்ப வரவுகள்சமனும்
நின்றிடும் மறைதிசையதனில்
அகரெனகண்டம் காட்டியேவிலகும்
அதின்பலம் உயர்வெனச்சுகமே. 29

சுகமெனசவுரி புதன்சிகிஊனில்
சூட்டினும் உயர்ச்சியும்மேலாம்
நிகரெனகாணு யோகத்திலிவர்க்கு
நின்றிடும் புகரவியூனில்
வகரெனக்கெட்டி மனைவர உண்டாம்
வழங்கிய சேய்சசி அர ஊன்
அகிரெனசேர்க்கை மேலதாய்கல்வி
அமைந்திடும் மணமது பெலமே. 30

பிலமெனயோகம் பிதாபலவரவாம்
பிரியமாய் முயர்ச்சியில் கவனம்
அலமிலாபெற்ற அன்னையுமடிவள்
அன்புடன் சனிதிசைதனதில்
சமமிலாசுகமும் பெருத்தவாணிபமாம்
வழங்கிடும் கடற்கரையதனில்
குலமெனசேர்க்கை மிகுபொருள் உயர்வாம்
கூரினும்புந்தி ஊனிவர்க்கே. 31

இவர்க்கெனமேலாய் வாணிபமுயர்ச்சி
இயம்பினேம் சிகிபுகர்ரவியூன்
நவர்க்கெனப்பொருளும் மேலதாய்லாபம்
நாட்டினபிதாவுமே அழிவன்
துவர்க்கெனபலமும் உயர்வெனபகர்ந்தோம்
துலங்கிய ஜென்மமுன்னிவனும்
அவர்க்கெனபாண்டி இழிகுலத்துதித்து
அன்புடன் சிவந்தனைப்பணிந்தே. 32

பணிந்திடும்செயலால் சோளநாட்டதனில்
பக்குவ நர்க்குலமதனில்
துணியுடன்வாணி வாழிபமைந்த
துலங்கியபிதா முதல்மனைக்கு
அணியெனத்துதியா புதல்வனாய் உதிப்பன்
கழி என இவனும் முப்பிறப்பதனில்
காட்டினேம் செய்ததைக்கேளே. 33

கேளெனமிருந்த அரசதைசெலுத்தி
கெட்டினன் குலமுதனிவனும்
நிரலென அந்ததோஷத்தால் இவர்க்கு
நிச்சயம் புத்திரதோஷம்
ஆமென அதுவும் விலகிடநீயும்
அன்புடன் சேதுவில்மூழ்கி
சூமெழனதினத்தால் ஓமமும்செய்தால்
சுருக்கமாய் ஏகபுத்திரனே. 34

ஏகபுத்திரனும் இச்ஜென்மத்திலிவர்க்கு
இயம்பினேம் மருபிறப்பிவனும்
பாகமாய்மேலோர் குலத்தினில்ஜெனித்து
பரகெதி அடைவனும் இவனும்
தாகமாய் இச்ஜென்மத்திலிவர்க்கு
தங்கியசேசசி அரவோன்
யோகமும்மோலாய் உரைத்தனர்பிலமாய்
உயர்ந்திடும் நிலசுகமனேயே. 35

மனைமுதல்கட்டி கடனுடன்வரவும்
மார்க்கமாய் தூரத்தில் அலைச்சல்
வினையது அணுகா நஷ்டமும்காட்டும்
விளங்கிய புந்தியின்திசையில்
அனையெனத்தனது சிகிபுகரவியூன்
அதின்பலன் சமமெனபகர்ந்தோம்
கனை எனச்செல்வ வாணிபலாபம்
காட்டியசேயர ஊனே. 36

ஊனினிர்க்கூட்டு வாணிபநஷ்டம்
உகர்ந்திடும் வழக்குகள்சிலவும்
கானெனச்சுகங்கள் ஏத்திடுவிவர்க்கு
காட்டியமரை சனிஊனில்
வானெனப்புவியில் ராஜயோகமுமாம்
வழங்கிய சிகிதிசையதனில்
பூனெனச்சனியோன் ஊன்வரஆவி
புகுந்திடும் எமபதிதனக்கே. 37

காக்கயர்வாக்கியம்

முற்றிற்று

சிவமயம்.

நவக்கிரக கோட்சாரபலன் கோம்மைப்பாட்டு.

சூரியன்.

சூரியனென்று நாலேந்தேழெட்டுச் சுகமிலொன்பது பன்னிரண்டில், வீரியமாகநின்றால்விபரீதம் விளைக்குமே நிதும் மானிடரே. 1

சந்திரன்.

சந்திரனிருநான்காறெட்டுவியத்தில் தானேகநித்து நின்றக்கால், மந்திரவாதி வாயடங்கினற்போல மாறுமே பலன்கள் மானிடரே. 2

செவ்வாய்.

செவ்வாயொன்றிரண்டு நாலெட்டுப்பத்தில் யேழும் விரையத் தினிலிருந்தால், எவ்வாறேபிள்ளை பெண்சாதி பெற்றார் நிலை யிசையாதென்னவு மானிடரே. 3

புதன்.

புதனேர்மூன்றுநான்காறெட்டுதசம்வியத்தில் பொல்லாரோடு தானிருந்தால் இதமிலையெந் நேரமுந் துக்க மெழும்புமென்றுணர் மானிடரே. 4

வியாழம்.

குருவேயொன்றுநான் காறெட்டுமூன்றில் கூடிப் பத்துப் பன்னிரண்டிலிருந்தால், உருவேயில்லையென் றேதினர் முன்னோர் உற்றுக்கேள்நிசமே மானிடரே 5

வெள்ளி.

சுக்கிரன்மூவாறே மொன்பதாரில் தொகையாயிருந் தாலிந்தபலன், அக்கிரமுமழுகையு மவமான மாகுமென் ருரே மானிடரே. 6

சனி.

சனியோரிருநான் கெட்டுதசம் வியத்தில் சலிப்பு டனே தானிருந்தால், இனிபிசாசு பூதப்பேய்கருப்பன் ஏவலாம்சத்துரு மானிடரே. 7

ராகு கேதுக்கள்.

ராகுகேதுக்களொன் றிரண்டெட்டு நவமுடன் விர யத்திருந்தால், பாகுசேர்மொழியாள் பயித்தியத்தால் பாடியாடுவரே மானிடரே. 8

மற்றவிடத்திற் கிரகங்களிருந்தால் மாளாத செல்வ மும் யோகம்வரும், முற்றுத்துறந்த முனிவர் சொன்ன ரிதை முறைமையாப்பார் மானிடரே. 9

நீசமென்றுநீ தள்ளாதே நிலையுச்சமனங் கொள் ளாதே, நீசனிருந்தவீட்டா னுச்சமானல் நிலைக்குமே யோகம் மானிடரே.

கொ ம் மை ப் பா ட் டா க மொழிந்தவனாரெனில் கோதை திருவடி தாடொழுது, நம்மையாழுந் தேவராச கவிராயன் நாடிச்சொன்னன் மானிடரே. 10

கோட்சாரப்பலாபலக் கொம்மைப்பாட்டு

முற்றிற்று.

123525

ஓ

அரிய சோதிட நூல்கள்.

சோதிடம் கற்றுக்கொள்பவருக்கு எளிதில் அறியும்
பொருட்டு வசனநடையில்
இயற்றியுள்ள

	ரூ. அ. ப
சுந்தரசேகரம்	0–12—
ஷை 2ம்பாகம் தியாகராஜசேகரம் ...	0–12—
ஷை 3ம்பாகம் ஆனந்தக்களிப்பு ...	0–12—
புலிப்பாணி சோதிடம் 300 ...	0–12—
கந்தர் ஆரூடம்	0—8—
காக்கயர் நூல்	0—4—
சோதிடமாலை தாய்மகள் ஏசல் ...	0—4—
சாதகலங்காரம் மூலமும் உரையும் ...	1— 3—
சோதிட களஞ்சியம் மூலமும் உரையும்	1—8—

☞ இன்னும் மற்ற சோதிட நூல்களும் கிடைக்

T. பொன்னுசாமி பிள்ளை,
புக்ஷாப்,
தெப்புக்குளம் போஸ்ட்,
திருச்சி